பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

08 10 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆசியாவின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு மாநாடான இந்தியன் மொபைல் காங்கிரசை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பிரதமரின் தொலைநோக்கு கொள்கைகளை சித்தரிக்கும் குறும்படப் போட்டி, படைப்பாளிகளை ஊக்குவிக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் இந்த ஆண்டு 13 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட இருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. மயிலாடுதுறையில் தருமபுரம் ஆதினத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மகப்பேறு மருத்துவமனைக்கான இடத்தை தொடர்ந்து அதே சேவைக்காக பயன்படுத்த வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Anmol Kharb காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஆசியாவின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு, ஊடக மற்றும் தொழில்நுட்ப மாநாடான இந்தியன் மொபைல் காங்கிரசை, பிரதமர் திரு.நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில், இங்கிலாந்து, ரஷ்யா, கனடா, ஜப்பான் ஆஸ்திரியா உட்பட, 150-க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள், தொழில்துறையினர் மற்றும் புதுமை கண்டுபிடிப்பாளர்கள் உட்பட ஏழாயிரத்திற்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

6-G, செமிகண்டக்டர் தயாரிப்பு உட்பட, தொலைத்தொடர்பு மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து இம்மாநாட்டில் எடுத்துரைக்கப்பட உள்ளது.

புதிய கண்டுபிடிப்புகளை, தயாரிப்பாக மாற்றுவதை மையக்கருத்தாகக் கொண்டு நடத்தப்படும் இந்த மாநாடு, டிஜிட்டல் மாற்றத்திற்கான கண்டுபிடிப்பு

மற்றும் சமுதாய முன்னேற்றத்தை ஊக்குவிப்பதென்ற இந்தியாவின் உறுதிப்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் அமையும் என்று, மத்திய அரசின் தொலைத் தொடர்புத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு கொள்கைகளை சித்தரிக்கும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த குறும்படப் போட்டி, படைப்பாளிகளை ஊக்குவிக்கும் தனித்துவமான முயற்சியாக அமையும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், படைப்பாற்றல், தொழில்நுட்பம் மற்றும் கதை சொல்வதன் வாயிலாக இந்தியாவின் ஆட்சி நிர்வாக பயணத்தை ஒருங்கிணைக்க மிகச் சிறந்த வாய்ப்பாக இந்தப் போட்டி அமையும் என்று தெரிவித்துள்ளார்.

படைப்பாற்றல் திறன்மிக்க அனைவரும் இதில் பங்கேற்குமாறு டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

விஷன் பாரத் என்ற தலைப்பிலான இந்தப் போட்டியில் பங்கேற்க விரும்புவோர் தங்களது படைப்புகளை இம்மாதம் 26ஆம் தேதிக்குள் visit blue kraft.in என்ற இணையதளத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் இந்த ஆண்டு சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி 13 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் மேற்கொள்ளப்பட இருப்பதாக மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டெல்டா மாவட்டங்களில் தற்போது குறுவை நெல் அறுவடை முழுவீச்சில் நடைபெற்று வருவதாக கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அடுத்த 10 தினங்களில் சம்பா சாகுபடி தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

5 ஆயிரத்து 438 ஏக்கரில் நெல் நாற்றங்கால் தயாராக இருப்பதுடன் மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு உள்ளதாலும், வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருவதாலும் சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி 13 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சம்பா சாகுபடி மேற்கொள்ளவிருக்கும் விவசாயிகள், தங்களது விதை நெல் தேவைக்கு அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை தொடர்புகொள்ளுமாறும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 2 ஆயிரத்து 708 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நிரந்தரமாக நிரப்பப்படும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 37 அரசு கலை, அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருப்பதுடன், கூடுதலாக 15 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர் சேர்க்கை இடங்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே மாணவர்களின் கல்வி கற்கும் திறன் பாதிப்படையக் கூடாது என்ற நோக்கில், உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட இருப்பதாகவும் திரு. கோவி. செழியன் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் 10 ஆயிரம் உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கும் நிலையில், 2 ஆயிரத்து 708 பணியிடங்கள் மட்டும் நிரப்பப்படும் என்ற

அறிவிப்பு, திமுக அரசு கல்வித்துறையை சீரழித்து வருவதை எடுத்துக்காட்டுவதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

மயிலாடுதுறையில், தருமபுரம் ஆதினத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மகப்பேறு மருத்துவமனைக்கான இடத்தை தொடர்ந்து அதே சேவைக்காக பயன்படுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த மருத்துவமனையை இடித்துவிட்டு வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்த மயிலாடுதுறை நகராட்சி மேற்கொண்டுள்ள முடிவை எதிர்த்து காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப்போவதாக தருமபுரம் ஆதினம் அறிவித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆதினத்தின் கருத்துக்கு மாறாக திமுக அரசு அந்த இடத்தில் வேறு திட்டங்களை நிறைவேற்ற முயன்றால், மாநில பிஜேபி போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் மாநில விலங்கான நீலகிரி வரையாடுகளின் வாழ்விடங்களை மீட்டெடுத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

வரையாடுகள் தினத்தையொட்டி உதகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட வன அலுவலர் திரு. கௌதம், இதனைத் தெரிவித்தார்.

(Voice Byte - Gautam - 30 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்துள்ளார்.

(voice byte - Senthamaraikannan - 39 Sec)

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

சூடான் நாட்டில், அரசுப்படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்குமிடையே நடைபெற்ற மோதலில், குழந்தைகள், கர்ப்பினிப் பெண் உள்ளிட்ட 13 பேர் உயிரிழந்தனர்.

--------------

கிழக்கு ஆப்பிரிக்க நாடான மடகாஸ்கரில், புதிய பிரதமராக ராணுவத் தளபதி ஜெனரல் Ruphin Fortunat Zafisambo-வை நியமித்து, அந்நாட்டு அதிபர் Andry Rajoelina உத்தரவிட்டுள்ளார்.

--------------

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்திற்குட்பட்ட Zehri நகரிலிருந்து, மூன்று பெண்கள் ராணுவத்தால் கடத்தப்பட்டிருப்பதாக, பலூச் மகளிர் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

--------------

கல்லூரி பேராசிரியர் பணிக்கான UGC நெட் தேர்வுக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

--------------

வரி ஏய்ப்பு புகாரின்பேரில் திருப்பூரில் உள்ள 5 பனியன் நிறுவனங்களில் வருமான வரித்துறையினர் நேற்று சோதனை மேற்கொண்டனர்.

--------------

மதுரையில் கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம் மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர்கள், சமூக பாதுகாப்பு நலவாரியத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு மாநில அமைச்சர் திரு. சி.வி. கணேசன் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

--------------

நீட் தேர்வில் முறைகேடு செய்த திண்டுக்கல் மாவட்டம் பழனியைச் சேர்ந்த மாணவி மற்றும் அவரது பெற்றோர் கைது செய்யப்பட்டனர்.

--------------

மதுரை கூடலழகர் பெருமாள் கோவிலில் ஐந்து கருடசேவை நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

--------------

தமிழ்நாடு வட்ட முதன்மை தலைமைக் கணக்காயராக திரு. Frederick Syiemlieh நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

--------------

சென்னையில் நேற்று நடைபெற்ற ரயில்வே வாரவிழாவில், தெற்கு ரயில்வேயில் சிறப்பாக பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு அதன் பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங் விருதுகளை வழங்கினார்.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Anmol Kharb காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஃபின்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர், சீன தைபேயின் Lin Hsiang-Ti-யை 23-21, 11-21, 21-18 என்ற செட் கணக்கில் வென்றார்.

இன்று நடைபெறும் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், சீன தைபேயின் Wen Chi Hsu-வை எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென் மற்றும் கிடாம்பி ஸ்ரீகாந்த் ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

<<<<The End>>>>